## இலங்கை புகையிரத சேவைகள்

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## இலங்கை புகையிரத சேவைகளுக்கான இறக்குமதிகளை பரீட்சிப்பதற்காக பரிசோதகர்களை நியமிப்பதற்காக பெறுகை

**பெறுகை இல.: SRS/F.7859**

1. இரு வருட காலப்பகுதிக்கு இலங்கை புகையிரத சேவைகளுக்கான கப்பற் சரக்குகளின் இறக்குமதிகளை பரீட்சிப்பதற்காக பரிசோதகர்களை நியமிப்பதற்காக புகழ் வாய்ந்த நிறுவனங்களிலிருந்து இலங்கை புகையிரத சேவைகளின் திணைக்கள பெறுகைக் குழுத் (உயர்மட்டம்) தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பெற்று 2023.08.07 ஆம் திகதியிலிருந்து 2023.09.18 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

**பிரதி பொது முகாமையாளர் (பெறுகை),**
**புகையிரத பெறுகை உபதிணைக்களம்,**
**ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-10, இலங்கை.**

| | |
|---|---|
| **தொலைபேசி இலக்கங்கள்** | : 94(11) 2438078 அல்லது 94(11)2436818 |
| **தொலைநகல் இலக்கம்** | : 94(11) 2432044 |
| **மின்னஞ்சல்** | : tender2@railway.gov.lk/srs.slr@gmail.com |
| **இணையதளம்** | : www.railway.gov.lk |

4. சரக்குகளை பரீட்சிக்கும் துறையில் ஆகக் குறைந்தது 5 வருட அனுபவத்தைக் கொண்டுள்ள புகழ் வாய்ந்த நிறுவனங்கள் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்காக தகுதியை பெற்றுக் கொள்வர்.
5. 2023.08.07 ஆம் திகதியிலிருந்து 2023.09.18 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும் (இலங்கை நேரம்) மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக 3,500 ரூபாவை அல்லது இலகுவாக மாற்றக்கூடிய நாணயத்தில் செலுத்திய பின்னர், இலங்கை, கொழும்பு-10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத பெறுகை உபதிணைக்கள அலுவலக முகவரிக்கு அல்லது இணைப்பு ''டி'' இல் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதுவராலயங்களிலிருந்து எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. அனைத்து விலைமனுக்களும் 750,000 ரூபா அல்லது இலகுவாக மாற்றக்கூடிய நாணயத்தின் நிகரான பெறுமதியான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். நிகரான தொகையை தீர்மானிக்கும் நோக்கத்திற்காக விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதிக்கு 28 நாட்களுக்கு முன்னரான திகதியன்று நிலவும் இலங்கை மத்திய வங்கியினால் பிரசுரிக்கப்பட்ட விற்பனை செலாவணி விகிதமானது பிரயோகப்படுத்தப்படல் வேண்டும்.
7. விலைமனுக்கள் 2023.09.19 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கப்படல் வேண்டுமென்பதுடன் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்),**
**புகையிரத சேவைகள் பெறுகைக்கான உபதிணைக்களம்,**
**இலங்கை புகையிரத சேவைகள்,**
**ஒல்கொட் மாவத்தை,**
**கொழும்பு-10.**

**Ref. No.: SRS/F.7859**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்),**
**இலங்கை புகையிரத சேவைகள்.**